1986 மே 13] [பேரவைத் தலைவர்]

பின்னர் பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4—30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

4. அறிவிப்புகள்— (தொடர்ச்சி)

(ஓ) நிதி ஒதுக்க (எண். 4) சட்டமுன்வடிவு 1986 (மே. செ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1986) ஆய்வு செய்யப் பெற்று, பரிந்துரைகள் எதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(உஉ) வேளாண் விளைப் பொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 34/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தை இந்த அவையில் எத்தனையாவது தடவை கொண்டுவருகிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியும். இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் நிறைவு ஏற்படும்போது அவற்றை அரசாங்கம் கலைத்துவிட்டு எடுத்துக் கொள்வது, சூப்பர்ஸெஷன் என்ற நடவடிக்கை தொடர்ச்சியாக நடந்துவருகிறது. இங்கே கொடுத்திருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவிலேகூட குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை காலமாக

** 1986 ஆம் ஆண்டு மே 7 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால் 1977-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பித்து இப்பொழுது 1986-ஆம் ஆண்டு மே மாதம் இந்தத் தேதி வரையில் ஒன்பது தடவைகள் இதே மாதிரி கலைத்துவிட்டு அரசாங்கம் அவற்றை எடுத்துக் கொண்டு அதிகாரிகளை வைத்துக் கொண்டு நடத்துப்படியான நடவடிக்கை தொடர்கிறது. ஒரு ஜனநாயக முறையில் இந்த மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு தேர்தல் நடத்தி அமைக்கப்பட வேண்டியதுதான் நியாயமானது, சரியானதும்கூட. விவசாய மக்களுடைய உற்பத்திப் பொருள்களை அவர்கள் அந்த முறையில் இலாபகரமாக அதைப் பயன்படுத்தி சந்தையில் விற்பனை செய்து அவர்களுடைய நிலைமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே அவர்கள் பிரதிநிதிகள் அதில் இருந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். ஆனால் ஏனோ இந்த ஆண்டுகளாக தொடர்ச்சியாக இதைக் கலைத்து அரசாங்கமே அதிகாரிகளை வைத்துக் கொண்டு நடத்திக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்படுகிறது, எதனால் இந்த நிலைமை தொடர்கிறது என்று நமக்குப் புரியவில்லை. போன தடவைகூட இம்மாதிரி சட்டம் கொண்டுவந்தபோது அந்தச் சட்டத்தை இங்கே பிரேரேபிக்கவே வேண்டாம், நீங்கள் அதை வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அந்தச் சமயத்தில் நான் பேசியது எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கும் அது தெரியும். இந்த மாதிரி கலைப்பு என்பதுகூட, அரசாங்கம் இதை ஏற்றுக் கொண்டு நடத்துவது என்றால்கூட, இப்படி வைத்துக் கொண்டு போவது ஒன்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகக்கூடாது என்றுகூட சொல்லப்படுகிறது. ஆனால் 1977 மே மாதத்திலிருந்து எடுத்துக் கொண்டால் இது பத்தாவது ஆண்டு ஆகவில்லையா? இப்படி, இந்த மாதிரியான நடவடிக்கை ஏன் என்று புரியவில்லை. இது மிகவும் தவறானது. ஜனநாயக முறைக்கு ஒத்து வராதது; அப்படிப்பட்ட நடவடிக்கை இது என்பது நம் எல்லோருக்கும் தெரியும்.

அண்மையில்தான் நம் தமிழ்நாட்டு மக்கள் ஒரு பெருமூச்சு விட்டமாதிரி, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிடி தேர்தல்கள் எல்லாம் 10 ஆண்டுகளுக்கு மேல் முடக்கி வைக்கப்பட்டு இருந்த நிலை மாறி தேர்தல் நடைபெற்று, இப்போது அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அந்த சபைகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இந்த நாடு முழுவதும் இன்றைக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களில் தேர்தல் கிடையாது. அதற்காக ஒரு விரிவான விளக்கமான சட்டத்தை இந்த அவையிலே நிறைவேற்றினார்கள். என்ன முறையில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றினோம் என்பது நமது சட்ட அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். அதற்குப் பிறகும்கூட இன்றைக்கும் கூட்டுறவு சங்கங்களில் தேர்தல் கிடையாது. அதற்கு வேண்டிய காரியங்களை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம், ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். விளக்கமான, விரிவான ஒரு

காம்ப்ரஹென்சிவ் சட்டத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம் என்று ஒவ்வொரு தடவையும் சொல்லப் படுகிறது. ஆனால், எத்தனை காலம் இந்த அரசு இதை நீட்டித்துக் கொண்டே இருக்குமோ, தெரியவில்லை; கூட்டுறவு சங்கங்களில் தேர்தல் கிடையாது. அதே மாதிரி இந்த மார்க்கெட்டிங் கமிட்டியிலும் தேர்தல் கிடையாது. மார்க்கெட்டிங் கமிட்டி என்பது ஒரு முக்கியமான அமைப்பு. விவசாயிகளுடைய பிரச்சினைகளில் ஓரளவு தீர்வு காண்பதற்கும், அவர்களுக்கு பாதுகாப்பு கிடைப்பதற்கும் மக்களுடைய பிரதிநிதிகள் இருந்து நடத்தப்பட வேண்டிய ஒன்றாகும். அப்படியிருந்தும், அந்தக் கமிட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருப்பதற்குப் பதிலாக, அந்தக் கமிட்டி முழுவதையும் அரசாங்கமே கலைத்து விட்டு, தன் கையில் எடுத்துக் கொண்டு, அதை நடத்துவது என்பது தொடர்ந்த நடைமுறையாகி விட்டது. 10 ஆண்டுகளாக இந்த நிலைமை நீடிக்கிறது. இப்போது மத்திய அரசாங்கம் 1984-ஆம் ஆண்டு இந்த கமிட்டி அமைப்பதற்கான சட்டத் திட்டப்படி கொண்டு வரவேண்டும் என்று சில ஆலோசனைகள் கூறியிருப்பதாகவும், அந்த ஆலோசனைகளை இந்த அரசு இன்னும் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகவும் அடிஷனலாக இன்னொரு காரணம் சொல்லப்படுகிறது. என்ன காரணமானாலும் சரி, இந்தச் சட்டத்தை நீட்டித்துக் கொண்டே போய், அதிகாரிகளை வைத்துக் கொண்டு, மக்கள் பிரதிநிதிகள் அதை நடத்த விடாமல் விட்டுவிடுவது, தேர்தல் இல்லாமல் விட்டுவிடுவது என்பது சரி இல்லை. ஒவ்வொரு தடவையும் அதைக் கொண்டு வரும்போது, ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்வது என்பது கொஞ்சமும் சரியல்ல. ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியை அமைப்பதற்கு என்ன ஆலோசனைகள் இருக்கிறதோ, அந்த ஆலோசனைகளை ஏற்று, காரியத்தை செய்ய வேண்டும்.

இதற்கு நான் ஒரு திருத்தப்பிரேரேபணையும் கொடுக்கவில்லை. இருந்தாலும்கூட, அரசாங்கத்தையும், அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இப்போது இதை ஒரு வருஷத்திற்கு நீட்டிக்கப் போகிறீர்கள், இந்த மாதிரி ஒவ்வொரு வருஷமாக நீட்டித்துக் கொண்டு போகாமல், மத்திய சர்க்கார் கொடுத்திருக்கும் ஆலோசனைகளை உடனடியாக ஆராய்ந்து, அதற்கு முன்னதாகவே தேர்தலை நடத்தி, ஒரு மார்க்கெட்டிங் கமிட்டியை அமைக்க வேண்டும். அப்படி அமைச்சர் அவர்கள் அமைப்பார்களா? அல்லது இன்னொரு வருஷம் கழித்து மறுபடியும் இதேமாதிரியான நிலைமையை உருவாக்குவார்களா என்பதை அமைச்சர் அவர்கள் பதிலில் நமக்கு எடுத்துச் சொல்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பை அமைக்க வேண்டும். இப்போதுள்ள நிலைமையை நான் ஒத்துக் கொள்ளவில்லை. இது மிகவும் தவறானது என்பதைச் சுட்டிக் காட்டி நான் அமர்கிறேன்.

(மாலை 4—40)

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கடுமையாக நான் ஆட்சேபிக்கிறேன்.

பொதுவாகவே ஏனோ இந்த வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தை மேலும் திருத்துவது மட்டுமல்ல, தேர்வு செய்யப்படுகின்ற அமைப்புகளின் மீது ஒரு தீராத எதிர்ப் புணர்ச்சி மாநில அரசிற்கு தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது என்பதை ஒவ்வொரு விஷயத்திலும் நம்மால் தெளிவாகப் பார்க்க முடிகிறது.

இங்கே இந்த மார்க்கெட்டிங் கமிட்டியைப் பொறுத்த வரையில், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால், அது நடைபெற வேண்டும் என்பதை இந்த மாநில அரசு தொடர்ந்து கடந்த 10 ஆண்டுகளாக தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறது. எந்த ஒரு அமைப்பும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளால், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் பிரதிநிதிகளால் நடத்தப்பட வேண்டுமென்ற நல்ல ஜனநாயகப் பண்பு ஏனோ இந்த அரசாங்கத்தால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்படுகின்ற அமைப்புகளை எதிர்க்க நெற்றிக் கண்ணை திறப்பது ஒன்றைத்தான் நிரந்தரமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கருதுகிறது என்று நான் கருதுகிறேன். இங்கே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கக் கூடிய சட்டமுன்வடிவில் கூட, தொடர்ந்து ஓராண்டிற்கு தனி அதிகாரிகள் கீழ் இந்த நிர்வாகம் ஒப்படைக்கப்படுவதற்கு சொல்லப்பட்டிருக்கக் கூடிய காரணங்கள், சொத்தையான நொண்டி காரணங்களே தவிர, உண்மையாக சொல்லப்பட்டிருக்கக் கூடிய காரணங்கள் அல்ல. அப்படி அதே மாதிரி சட்டப் பிரிவில் பல்வேறு திருத்தங்களைக் கொண்டுவர வேண்டுமென்று அரசு கருதியிருந்தாலும்கூட, அதற்காக தேர்தலை தள்ளி வைக்க வேண்டிய அவசியம் இல்லை, நிச்சயமாக இந்த நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் கூட, இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவின் மூலம் மேலும் ஓராண்டு காலத்திற்கு இந்த அதிகாரியின் கீழ் இந்த நிர்வாகத்தை ஒப்படைப்பது முறையான செயல்முறை ஆகாது. இப்போதும் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, ஓராண்டு காலத்திற்கு என்று தள்ளி வைக்கிறீர்கள். அத்தோடு, இந்த ஓராண்டு காலத்திற்குள் தான் இந்தத் தேர்தல் நடத்துவது பற்றி, அதிலே ஒரு விஷயத்தை வெளிப்படையாகச் சொல்லியாக வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வரை, இத்தகைய

அமைப்புகளுக்கு தேர்தலே ஒரு போதும் நடத்தப்படாது என்ற ஒரு நிலையை மேற்கொண்டிருக்கிறார்களா? அல்லது ஒரு ஆண்டு காலத்திற்குள் இந்தத் தேர்தல், இந்த வருடத்தில், இந்த மாதத்தில் நடத்தப்படும், தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் இந்த அமைப்புகள் நிர்வகிக்கப்படும் என்ற உறுதிமொழியையாவது தரமுடியுமா என்பதைத்தான் மாநில அரசாங்கத்தின் சார்பில் அமைச்சரிடமிருந்து எதிர் பார்க்கிறேன். அமைப்புகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படுகின்ற இந்த சட்டமுன்வடிவை இறுதியாக இனிமேல் கொண்டு வராது, அதுமட்டுமல்லாமல், இனிமேல் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக தேர்வு செய்யப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் வராது இருக்கின்ற முறையை உருவாக்காமல் இருப்பதற்குரிய உறுதிமொழியைத் தர வேண்டுமென்று சொல்லி, இத்தகைய நடைமுறைகளுக்கு இத்தோடு இந்த அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா மீது நான் திருத்தம் கூட கொடுத்திருக்கிறேன். ஓராண்டு காலத்திற்கு இந்த மார்க்கெட்டிங் கமிட்டியை, தனி அதிகாரி பொறுப்பில் நீட்டிக்க வேண்டுமென்று அமைச்சர் இந்த ஆண்டு மட்டுமல்ல, கடந்த ஆண்டும் கேட்டார், எனக்கு ஒரு ஆச்சரியம், மத்திய சர்க்கார் அனுப்புகிற மாடல் பில் என்கின்ற பில், அப்படி என்ன பெரிய பைபிளா, அல்லது குரானா? அந்த மாடல் பில்லை அப்படியே ரிசர்ச் பண்ணி அதிலே இருப்பதில் நல்லதை எல்லாம் எடுத்து, இதிலே இன்கார்ப்போரேட் பண்ண வேண்டும். இது ஒரு சாதாரண மாடல் பில், 1984 டிசம்பரில் இந்த பில் அனுப்பப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இன்கார்ப்பொரேட் பண்ண வேண்டும் என்பது தான் உண்மையான ரீசனா? இப்படி தள்ளிப் போடுவதினாலும், தனி அதிகாரிகளிடம்இந்த பவரைக் கொடுப்பதினாலும்என்னஆதாயம் என்ன நன்மை இந்த சர்க்காருக்கு? ஆகவே நான் கேட்கிறேன். எலக்டட் பாடி மேலே உங்களுக்கு நம்பிக்கையில்லை, போகப் போக சட்டசபையைக் கலைத்தால் கூட ஆச்சரியப்பட மாட்டேன். அப்படிப்பட்ட ஒரு நிலை இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது. எலக்டட் பாடியால் இந்தத் துறை மட்டுமல்ல. காலையிலே கூட உள்ளாட்சித்துறை பற்றிப் பேசினார்கள். ஒவ்வொரு துறையிலும் எலக்டட் பாடி என்றாலே நமக்கு கசக்கிறது. மேலும் மார்க்கெட்டிங் கமிட்டியில் எக்கச்சக்கமாக பணம் டீல் பண்ணுவதாக நான் கேள்விப்படுகிறேன். 'ஹியூஜ் அமௌண்ட் ஹேண்டில்' பண்ணுகிறதாகத் தெரிகிறது. காட்டன், மிளகாய், புளி போன்று பல்வேறு விவசாய உற்பத்தியாளர்கள் இதனாலே பாதிக்கப்படுவதாகவும், அதிகாரிகள் இதை வைத்துக் கொண்டு, ஆதாயம் தேடுவதாகவும், கொள்ளை லாபம் அடிப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன்.

ஆகையால், அந்த 'மாடல் பில்லிலே' இருக்கிற சப்ஸ்டென்ஸை, தேவைப்படுவதை நாம் எடுத்துக் கொண்டு, இன்கார்ப்பரேட் செய்வதற்கு ஓராண்டு தேவையா? இதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்களை மாதிரி 4 பேரை உட்கார வைத்து செய்தால், 1 மாதத்தில் செய்து விடலாம், ஓராண்டு, ஓராண்டு என்று சொல்லி, ஆண்டுகளை நீடிப்பது சரியல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியில் மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகிக்காத ஒரு மோசமான நிலை ஏற்படுகிறது. ஆகையால், தவறுகள் அங்கே நடைபெறுவதாக கருத்து இருக்கிறது. தவறுகளைக் களைவதற்கு மக்கள் பிரதிநிதிகளை உருவாக்குவதற்கு இந்த அரசு முன் வர வேண்டும்.

அதனால் அமைச்சர் அவர்கள், இந்த பில்லை நான் கொடுத்திருக்கிற அமென்ட்மென்ட் பிரகாரம்--மே வரைக்கும் இருக்கிறது என்று கருதுகிறேன். மே வரை இருக்கிறது, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மூன்று மாதங்கள் போதும். திருத்தம் கூட; 3 மாதம் போதும் என்றுதான் கொடுத்திருக்கிறேன். அதாவது Instead of one year, three months என்று கொடுத்து இருக்கிறேன்.

மூன்று மாதங்கள் என்ற திருத்தத்தை ஏற்று, மூன்று மாதத்திற்குள்ளாக மத்திய அரசினுடைய மாடல் பில்லை, இன்கார்ப்பரேட் செய்து, 'காம்பரஹென்சிவ் பில் ஆக்கி, தேர்தலை உடனடியாக மார்க்கெட்டிங் கமிட்டிக்கு நடத்தவேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆக, இந்த மசோதா திருத்தத்தோடு கொண்டு வரப்படுமானால், நான் வரவேற்பேன். ஏனென்றால் விரைவிலே மக்கள் பிரதிநிதிகள் அங்கு வருவதற்கு வாய்ப்பாக இருக்கும், ஏதுவாக இருக்கும் அமைச்சர் அவர்கள் செய்வாரா? கூட்டுறவுத் துறை அமைச்சராக திரு. பொன்னையன் இருந்தபோது நான் ஒரு திருத்தம் கொடுத்தேன். பெருந்தன்மையோடு, அதை இணைத்துக்கொண்டு, அஃபிஷியலாக அப்பபேதே எடுத்துக் கொள்ளவில்லையெனினும் சட்டமாக இதே சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து அவர்கள் நல்லவர். நல்லதைச் செய்வதிலே நாட்டமுள்ளவர். ஆகவே, என்னுடைய திருத்தத்தை ஏற்று, அவர் இந்த பில்லை உடனடியாக, அந்தக் கமிட்டி உருவாக்குவதற்குரிய முறையில் கொண்டு வருவார் என்று நம்புகிறேன். அதைச் செய்வார் என்று நம்பி ஓராண்டு என்பதை எதிர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மீது, மாண்புமிகு உறுப்

1986 மே 13] டாக்டர் கா. காளிமுத்து

பினர் பெருமக்கள் ரமணி அவர்களும், சுப்பராயன் அவர்களும், பொன்னுரங்கம் அவர்களும் வழங்கியிருக்கிற கருத்துக்களிலே இருக்கிற உணர்ச்சியை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னதைப் போல, வேளாண் விளை பொருள் அங்காடிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்து அதனை நடத்திச் செல்வதுதான் விவசாயப் பெருமக் களுக்கு நலம் பயக்கும் என்பதில் மாற்றுக் கருத்து ஏதும் இந்த அரசுக்கு இல்லை.

திரு பொன்னுரங்கம் சுட்டிக்காட்டியதைப் போல, தனிஅதிகாரி களுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுக்கின்ற காரணத்தி னால், அரசாங்கத்திற்கு எந்த ஆதாயமும் இல்லை. ஆகவே, அப் படி அரசுக்கு எந்த ஆதாயமும் இல்லை என்கிறபோது, நீட்டிப்பு கொடுக்க வேண்டிய இன்றியமையாமை ஏன் ஏற்படுகிறது என் பதை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். நான் இங்கே தெரிவிப்பது, மத்திய அரசு அனுப்பியிருக்கிற இந்த மாதிரிச் சட்ட முன்வடிவிலே இருக்கிற சில நல்ல அம்சங்களை நாம் எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் வேளாண் விளை பொருள் அங்காடிகளைப் பொறுத்த வரை மாநில அரசாங்கத்தின் அதிகாரப் பட்டியலுக்குள்ளே இருக்கிற சட்டம்தான். ஆகவே, அதிலே இருக்கிற நல்ல அம்சங்களை ஏற்றுக் கொண்டு நாம் ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வர இருக்கிறோம்.

இப்போது இருக்கிற சட்டத்தின்படி வேளாண் விளை பொருள் அங்காடிகளை நாம் நடத்திச் செல்வது, அந்த வகை யிலே தேர்தலை நடத்துவது என்பது பொருத்தமாக இராது. ஏனென்றால், விவசாயப் பெருமக்கள், வியாபாரிகள், அனை வருமே வேளாண் விளை பொருள் அங்காடிகளிலே வாக்காளர் களாக, உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே, தேர்தல் நடத்த வேண்டும் என்றால், ஏறத்தாழ பொதுத் தேர்தலைப் போலத் தான் நடத்த வேண்டியிருக்கும். ஒவ்வொரு விளை பொருள் அங்காடிக் குழுவும் தேர்தலுக்காகவே, பல மடங்கு பணத்தைச் செலவு செய்யுமானால், ஆக்கபூர்வமான பல செயல் திட்டங்களுக்கு பணம் இல்லாத சூழ்நிலை ஏற்படும். அதை எல் லாம் கருத்திலே கொண்டு தான், மராட்டிய மாநிலம் போன்ற மற்றமாநிலங்களிலே இருப்பதைப்போல, நாம் இங்கே ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்கு இருக்கிறோம். மாண்பு மிகு உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிற கருத்தின் அடிப்படையில் நான் ஒரு உறுதி மொழியாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் அந்த ஒருங்கிணைந்த சட்ட முன்வடிவு வரும் என்ற உறுதியைத் தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண் டும் என்று கேட்டு அமைகிறேன்.

[1986 மே 13

மாண்புமிகு பேரவை துணை தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 2. சட்ட முன் வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்.''

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 2, *after* "(Tamil Nadu Act 23 of 1959)", *insert* the following :—

(hereinafter referred to as the principal Act).

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

In clause 2, *for* the words "ten years" *substitute* the words "nine years and three months".

திரு. ம. ஆபிரகாம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

(மாலை 4-50)

திரு. ப. பொன்னுரங்கம் : அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

1986 மே 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"In clause 2, after "(Tamil Nadu Act 23 of 1959)", *insert* the following :—

"hereinafter referred to as the principal Act)".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

புதிய பிரிவு 3.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

After clause 2, add the following :—

"3. *Persons appointed to carry out the functions of certain market committees to continue.*— (1) Not-withstanding anything contained in the principal Act or in any other law for the time being in force, the persons appointed under clause (*a*) of sub-section (3) of section 24 of the principal Act and holding office immediately before the 11th day of May 1986 (hereinafter in this section referred to as the said persons) shall continue to hold office and carry out the functions of the market committees for such period or periods as the State Government may specify under sub-section (1) of section 24 of the principal Act, as amended by this Act.

(2) Anything done or any action taken by the said persons during the period commencing on the 11th day of May 1986 and ending with the date of publication of this Act in the *Tamil Nadu Government Gazette* shall be deemed to have been done or taken under the principal Act, as amended by this Act."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

புதிய பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத் தத்தை மொழிகிறேன் :

"In clause 1, for sub-clause (2) substitute the following (2) It shall be deemed to have come into force on the 11th day of May 1986."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடி விற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1986), திருத்தப்பெற்றபடி, நிறை வேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

(ஊஊ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/1986)**ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதை எதிர்ப்பதற்கான மூலகாரணமே

**1986 ஆம் ஆண்டு சனவரி 29 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS